# 2023

## வருடாந்த அறிக்கை

# லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நிதியத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும் | 01 |
| தார்மீகப் பெறுமதிகள் | 02 |
| கடந்த ஐந்து வருடங்களில் அடைந்த எய்துகைகள் | 03 |
| மஹபொல நிதிய விடயத்திற்குப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்பான அமைச்சர் | 04 |
| நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை – 2023 | 05 |
| செயற்பாட்டு மீளாய்வு | 06-12 |
| கூட்டிணைந்த நல்லாட்சி | 13 – 15 |
| மஹபொல நம்பிக்கை நிதியத்தில் ஏனைய முதலீடுகள் | 16 – 18 |
| நிதியியற் கூற்றுகள் | 19– 49 |
| நிதிக் கூற்றுகள் பற்றிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 50 – 59 |

## தொலைநோக்கு

“வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் கற்ற சமுதாயத்தை உருவாக்குதல்.”

## செயல்நோக்கு

“உயர்கல்விக்கான வசதிகளை விருத்தி செய்வதன் மூலம் வசதிகுறைந்த இளைஞர், யுவதிகள் தங்கள் உயர்கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு புலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் சம வாய்ப்புகளை உருவாக்குதல்”

## நோக்கங்கள்

- இளைஞர், யுவதிகளுக்கு உயர் கல்வி வசதிகளை வழங்குதல்
- இளைஞர், யுவதிகளுக்கு அவர்கள் ஒரு பல்கலைக்கழகம் அல்லது தொழில்நுட்ப அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் கல்வி, கைத்தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை பூர்த்தி செய்ய இயலுமான வகையில் தமது இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்த தகுதியுள்ள இளைஞர், யுவதிகளுக்கு உதவி வழங்குதல்.
- இளைஞர், யுவதிகள் தங்கள் தொழில்சார் திறன்களையும் போட்டித்திறனையும் விருத்தி செய்ய உதவும் வகையில் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களை அமைத்து முகாமையிடுவதற்கு உதவுதல் மற்றும் அமைத்துக் கொடுத்தல்
- கல்வி மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள், நிறுவனங்கள், மன்றங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களை முகாமையிடுவதற்கும் நடத்துவதற்கும் வழியமைத்து உதவுதல்.
- விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி மேம்பாட்டில் ஈடுபட்டுள்ள அத்தகைய நபர்களின் தேர்ச்சி மற்றும் திறனை விருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவி வழங்குதல். (தற்போது, புலமைப்பரிசில் வழங்குதல் முன்னுரிமையுடன் கூடிய முக்கிய பணியாகக் கருதப்படுகிறது).

### நெறிமை

நாம் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில்களுக்கு நியாயமான முறையில் வெளிப்படைத்தன்மையுடன் குறித்துரைக்கப்பட்ட முறையைப் பின்பற்றி மாணவர்களைத் தெரிவு செய்வதோடு, தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்களை நியாயமான காலப்பகுதிக்குள் செலுத்துவதற்கும் முயற்சிகளை மேற்கொள்கிறோம்..

### நெகிழ்வுத்தன்மை

நிதியத்தை வலுப்படுத்துவதற்காக பணியாளர்கள் மற்றும் நிதியத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, போட்டி நிறைந்த நிதிச் சந்தையில் புதுமையான எண்ணக்கருக்களை நாடி வெற்றிகரமாக நகர்ந்து வருகிறது..

### நேர்முக அணுகுமுறைகள்

புலமைப்பரிசில் வழங்குவதிலும், பிற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதிலும், நிதி பெறுவதிலும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன், அனைத்து சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள பணியாளர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

### குழு உணர்வு

மஹபொல புலமைப்பரிசில் நிதியத்தின் பணியாளர்கள் திறந்த தன்மை, நட்பு மற்றும் தனிப்பட்ட விருத்தி ஆகிய பண்புகளுடன் ஒத்துழைப்பு இலக்குகளை அடைய ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள்.

### தனித்துவத்தை நோக்கிய போக்கு

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பணியாளர்கள் தங்கள் வகிபாகம் குறித்து சிறந்த புரிதலையும் நம்பிக்கையையும் பெற்றுள்ளதுடன், அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய தொடர் முயற்சிகளை மேற்கொள்வது ஒரு வினைத்திறனான வழிமுறையாகும். ஒரு சிறிய குழு பணியாளர்கள் (16பணியாளர்கள்) மாதாந்தம் ஏறத்தாழ70,000 புலமைப்பரிசில்களை வழங்குவதில் சாதித்துள்ளனர்.

### வினைத்திறன்

புலமைப்பரிசில் மஹபொல நிதியத்தின் பணியாளர்கள் அதன் சேவையை தொடர்ச்சியாக உயர் தரத்தில் பராமரிக்க உறுதிபூண்டுள்ளனர்.

## கடந்த ஐந்து வருடங்களில் அடைந்த எய்துகைகள் (2019 -2023)

- மஹபொல புலமைப்பரிசில்களுக்கு தகுதி பெறுவதற்கான வருமான வரையறை2018இலிருந்த ரூ.300,000இலிருந்து ரூ.500,000ஆக உயர்த்தப்பட்டது. இதன் விளைவாகபுலமைப்பரிசிலின் எண்ணிக்கை 4,000வரை அதிகரித்தது.

- புலமைப்பரிசில்களை செலுத்துவதற்கான நேரடி வங்கி முறை 2019இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

- தொழில்நுட்பக் கல்லூரிகளின் சகல மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் தவணைத்தொகை ரூ.1,500/- இலிருந்து ரூ.2,500/- ஆக அதிகரிக்கப்பட்டது.

- வருடாந்தம் வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை 1,000ஆல் அதிகரித்தல் சாத்தியமாகும். அதன்படி, 2022/2023 கல்வியாண்டில் 17,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- 2023 இல் நிலையற்ற நிதிச் சந்தை நிலைமைகள் இருந்தபோதிலும், முறையான நிதி முகாமை மற்றும் செலவுக் கட்டுப்பாடு மூலம் 34% நிகர ஆண்டு வளர்ச்சியை அடைய முடிந்தது.

- மஹபொல நிதியத்தின் மூலதன சொத்துக்களை அதிகரிப்பதன் மூலம் அடுத்த ஆண்டுகளில் வழங்கப்படும் விஞ்ஞான புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையை ஏறத்தாழ50%அதிகரிக்க வேண்டிய தேவை பொருட்டு, நிதியத்தின் வருடாந்த வருமானம் சுமார் ரூ. 2பில்லியனால் அதிகரிக்கப்பட வேண்டும்..

**மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் பொறுப்பான அமைச்சர்-1981 - 2023**

| | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் | காலப்பகுதி (வருடம்) |
|---|---|---|---|
| 1 | வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ. அமைச்சர் லலித் அத்துலத் முதலி | 1981 - 1983 |
| 2 | வர்த்தக மற்றும் கப்பற்றுறை அமைச்சு | கௌரவ. அமைச்சர் லலித் அத்துலத் முதலி (தேசிய பாதுகாப்பு அமைச்சர்) | 1984 - 1988 |
| 3 | வர்த்தக மற்றும் கப்பற்றுறை அமைச்சு | கௌரவ. அமைச்சர் லலித் அத்துலத் முதலி (விவசாய, உணவு மற்றும் கூட்டுறவுகள் அமைச்சர்) | 1989-1990 |
| 4 | வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ. அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் - நம்பிக்கைப் பொறுப்பாளர், கௌரவ லலித் அத்துலத் முதலி (விவசாய, உணவு மற்றும் கூட்டுறவுகள் அமைச்சர்) | 1991 -1992 |
| 5 | வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ. அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் - நம்பிக்கைப் பொறுப்பாளர், கௌரவ லலித் அத்துலத் முதலி (விவசாய, உணவு மற்றும் கூட்டுறவுகள் அமைச்சர்) | 1993 |
| 6 | வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ. அமைச்சர் ஏ.ஆர் மன்சூர் | 1994 |
| 7 | உள்நாட்டு, சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு | கௌரவ. அமைச்சர் கிங்ஸ்லி ரி. விக்ரமரத்ன | 1995 - 2000 |
| 8 | உள்நாட்டு, சர்வதேச வர்த்தக மற்றும் வாணிப, கடல்சார் அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு | கௌரவ. அமைச்சர் ரவூப் ஹக்கீம் | 2001 |
| 9 | வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு | கௌரவ. அமைச்சர் ரவி கருணாநாயக்க | 2002 - 2004 |
| 10 | வாணிப மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சு | கௌரவ. அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே | 2004 மே - 2007 |
| 11 | வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சு | கௌரவ. அமைச்சர் கலாநிதி. பந்துல குணவர்தன | 2008 - 2009 |
| 12 | கூட்டுறவு மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | கௌரவ. அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ | 2010 - 2012 |
| 13 | ஜனாதிபதி செயலகம் | ஜனாதிபதி செயலாளர் | 2013 - 2014 |
| 14 | உணவுப் பாதுகாப்பு அமைச்சு | கௌரவ. அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா | 2015 |
| 15 | அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு | கௌரவ. அமைச்சர் மலிக் சமரவிக்ரம | 2015 நவம். - 2018 |
| 16 | உயர் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு | கௌரவ. அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ச | 2018 யூலை – செப். |
| 17 | நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு | கௌரவ. அமைச்சர் ரவூப் ஹக்கீம் | 2018 ஒக்டோ- 2019 நவம். |
| 18 | உயர் கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சு | கௌரவ. அமைச்சர், கலாநிதி. பந்துல குணவர்தன | 2019 நவம். |
| 19 | வர்த்தக அமைச்சு | கௌரவ. அமைச்சர், கலாநிதி. பந்துல குணவர்தன | 2020 ஜன.- 2021 டிசம். |
| 20 | வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு | கௌரவ. அமைச்சர் நளின் பெர்னாண்டோ | 2022 ஜன. -2023 டிசம். |

## நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை - 2023

| | நம்பிக்கைப் பொறுப்பாளர்/கள் | பதவி | சபையில் பதவி |
|---|---|---|---|
| 1. | பி.ஏ. பிரேமதிலக (மே 2023 – யூலை 2023) | ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம் | தலைவர் |
| 2. | கௌரவ. அமைச்சர் நளின் பெர்னாண்டோ (2022 ஜன. -2023 டிசம்) | வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் | தலைவர் |
| 3. | திரு. ஏ.எம்.பீ.எம்.பி. அத்தபத்து (2023 பெப். – 2023) | வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் | பதவிவழி நம்பிக்கைப்பொறுப்பாளர் |
| 4. | திரு.எம்.என். ரணசிங்ஹ (2022 யூன் – 2023 நவ) | செயலாளர், கல்வி அமைச்சு | பதவிவழி நம்பிக்கைப்பொறுப்பாளர் |
| 5. | சிரேஸ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க (2022 செப். – 2023 நவ) | தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் |
| 6. | கலாநிதி. யசந்த மதுரப்பெரும (2022 ஓக. 2023 நவ) | விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம் | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் |
| 7. | திரு.எஸ்.வி.டி. கேசரலால் குணசேகர (ஜன. 2023 - யூன் 2023) | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் |

**புலமைப்பரிசில் கொடுப்பனவு**

**புலமைப்பரிசில் கொடுப்பனவு பற்றிய தகவல் (தவணை ஒன்றிற்குரிய தகவல்கள்)**
**பல்கலைக்கழக மாணவர்களுக்கு**

| புலமைப்பரிசில் வகை | புலமைப்பரிசில் ஒன்றுக்கு செலுத்தப்பட்ட தொகை (ரூ.) | மஹபொல நம்பிக்கை நிதிய பங்களிப்பு (ரூ.) | திறைசேரியின் பங்களிப்பு (ரூ.) |
|---|---|---|---|
| சாதாரண புலமைப்பரிசில் கொடுப்பனவு | 5,000/- | 2,550/- | 2,450/- |
| சிறப்புத் தேர்ச்சி புலமைப்பரிசில் கொடுப்பனவு | 5,050/- | 2,600/- | 2,450/- |

**ஏனைய நிறுவன மாணவர்களுக்கு**

| இல. | நிறுவனத்தின் பெயர் | மாணவர் வகை | மஹபொல நம்பிக்கை நிதிய பங்களிப்பு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | தேசிய சமுக அபிவிருத்தி நிறுவனம் | சாதாரண | 2,150 |
| 2 | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் * | சாதாரண | 2,550 |
| 3 | பௌத்த ஸ்ராவக பிக்சு பல்கலைக்கழகம் | சாதாரண | 2,550 |
| 4 | இலங்கை சட்டக் கல்லூரி | தேர்ச்சி | 2,200 |
| | | சாதாரண | 2,150 |
| 5 | இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் SLIATE ** | சாதாரண | 2,500 |
| 6 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | | *** |

* பல்கலைக்கழகத்திலிருந்து ரூ.2,450/= உடன் சேர்த்து மாணவர்களுக்கு ரூ.5,000/= வழங்கப்படுகிறது

** ஒவ்வொரு மாணவருக்கும் வருடமொன்றுக்கு 9 தவணைகள் வழங்கப்படுகின்றன

*** 400 மாணவர்களுக்கு வருடாந்தம் ரூ.4,000 என்றவாறு(ரூ.1,600,000) 2 தவணைகளாக வழங்கப்படும்

**புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை**

| விபரம் | மாணவர் எண்ணிக்கை |
| --- | --- |
| பல்கலைக்கழக மாணவர்கள் (சகல கணக்கியல் வருடங்களிலும்) | 63,000 |
| ஏனைய நிறுவன மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் | 7,254 |

| **புலமைப்பரிசில் கொடுப்பனவுக்கான வருடாந்த செலவு** | **ரூ. 3.0 பில்லியன்** |
| --- | --- |
| மஹபொல நம்பிக்கை நிதிய பங்களிப்பு | **ரூ.1.6 பில்லியன்** |
| திறைசேரியின் பங்களிப்பு | **ரூ. 1.4 பில்லியன்** |

**மஹபொல புலமைப்பரிசில் வழங்கல்கள் (பல்கலைக்கழகத்தின்படி) - 2021/22 கல்வியாண்டு மாணவர்களுக்கு**

| உப இல | கற்கை | தெரிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | | புதிய | பழைய | சேகரிப்பு |
| 1 | உயிரியல் | M | 279 | 106 | 3,854 |
| 2 | | O | 2,511 | 958 | |
| 3 | பௌதிகவியல் | M | 265 | 39 | 3,062 |
| 4 | | O | 2,409 | 346 | |
| 5 | வர்த்தகவியல் | M | 281 | 16 | 2,969 |
| 6 | | O | 2,531 | 141 | |
| 7 | கலை/ வர்த்தகம் | M | 42 | 41 | 4,661 |
| 8 | | O | 38,000 | 373 | |
| 9 | பொறியியல் தொழில்நுட்பம் | M | 78 | 6 | 843 |
| 10 | | O | 705 | 54. | |
| 11 | உயிர்முறைமைத் தொழில்நுட்பவியல் | M | 55 | 6 | 611 |
| 12 | | O | 499 | 51 | |
| | மொத்தம் | | **13,863** | **2,137** | **16,000** |

**மஹபொல புலமைப்பரிசில் வழங்கல்கள் (ஏனைய நிறுவனங்கள்)**

| நிறுவனம் | | மாணவர் எண். |
|---|---|---|
| 1 | இலங்கை சட்டக் கல்லூரி | 25 |
| 2 | தேசிய தொழில்நுட்பவியல் நிறுவனம், மொரட்டுவை | 170 |
| 3 | பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் | 26 |
| 4 | பௌத்த ஸ்ராவக பிக்சு பல்கலைக்கழகம் | 20 |
| 5 | தேசிய சமுக அபிவிருத்தி நிறுவனம் (தரம் 10 டிப்ளோமா) | 10 |
| 6 | இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் | 1,500 |
| 7 | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 400 |
| | மொத்தம் | **2,151** |

## செயற்பாட்டு மீளாய்வு

**பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மஹபொல புலமைப்பரிசில் பெறுநர்களுக்கும் இடையிலான ஒப்பீடு**

| வருடம் | **17/18** | **18/19** | **19/20** | **20/21** | **21/22** |
|---|---|---|---|---|---|
| மொத்த பல்கலை அனுமதிகளின் எண்ணிக்கை | 30,000 | 31,158 | 34,161 | 35,000 | 41,111 |
| வருமான எல்லைக்கமைய தகுதி பெற்ற மாணவர் எண்ணிக்கை (ரூ. 5 லட்சத்திலும் குறைய) | 15,000 | 20,000 | 17,890 | 20,000 | 26,000 |
| மஹாபொல புலமைப்பரிசில் பெறுநர்களின் எண்ணிக்கை | 14,500 | 14,984 | 15,001 | 15,000 | 16,000 |
| மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக வருமான எல்லைக்கமைய தகுதியான மாணவர்கள் | 50% | 64.1% | 52% | 57.1% | 64.88% |
| மொத்த மாணவர் எண்ணிக்கையின் சதவீதமாக மஹாபொல புலமைப்பரிசில் பெறுநர்கள் | 48% | 48.% | 44% | 42.85% | 39.88% |
| வருமான எல்லை அடிப்படையில் தகுதியான மாணவர் எண்ணிக்கையிடையே மஹாபொல பெறுநர் எண்ணிக்கை | 96% | 75% | 84% | 75% | 61.5% |

## 31.12.2023 இலுள்ளவாறு மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நிதி நிலைமை

### மொத்த நிதியத் திரட்டு




| | ரூ. மில் |
|---|---|
| முதலீட்டு நிதி | 16,831 |
| NWCL முதலீடு | 985 |
| SLIIT முதலீடு | 1077 |
| மிலவெவ காணி | 340 |
| லொத்தர் முதலீடுstment | 2 |
| **மொத்தம்** | **19,235** |

### முதலீடு - பிரதான நிதியம்




| | ரூ. மில்.. |
|---|---|
| திறைசேரி முறிகள் | 3,456 |
| திறைசேரி உண்டியல் | 10,120 |
| **மீள்கொள்வனவு** | 1,355 |
| நிலையான வைப்பு | 1,900 |
| **மொத்தம்** | **16,831** |

## முதலீட்டு வருமானம் - பிரதான நிதியம்




| | ரூ. மில் |
|---|---|
| திறைசேரி உண்டியல் | 1,514 |
| திறைசேரி முறிகள் | 614 |
| கடன்பத்திர வட்டி | 10 |
| நிலையான வைப்பு வட்டி | 258 |
| ஏனைய வருமானம் | 66 |
| **மொத்தம்** | **2462** |

## மொத்த வருமானம் 2023




| | ரூ.மில். |
|---|---|
| **முதலீட்டு வருமானம்** | 2,461 |
| **லொத்தர் லாபம்** | 1,519 |
| SLIIT வாடகை | 25 |
| மொத்தம் | **4005** |

**லலித் அதுலத்முதலி மஹபொல உயர்வல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம், 31.12.2023 இலுள்ளவாறு வருமான, செலவினப் பகுப்பாய்வு**

(ரூ.மில்.)

| முதலீட்டு வருமானம் | 31.12.2023 | 31.12.2022 | மாறல்திறன் |
|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 614.3 | 726.7 | 12.4% |
| திறைசேரி உண்டியல்கள் | 1,513.7 | 628.9 | 26.2% |
| கடன்பத்திர வட்டி | 9.7 | 110.8 | 1.2% |
| ஏனைய நிலையான வைப்பு நிகர வட்டி | 258.1 | 272.1 | 85.9% |
| ஏனைய முதலீட்டு வருமானம் | 65.5 | 33.2 | 67.5% |
| **மொத்த முதலீட்டு வருமானம்** | **2,461.3** | **1,771.7** | **11.4%** |
| **நேரடிச் செலவுகள்.** | | | |
| காப்புக் கட்டணம் - BOC முதலீட்டுக் கணக்கு | (0.7) | (2.7) | -2% |
| **நிகர முதலீட்டு வருமானம்** | **2,460.6** | **1,769.0** | **-8%** |
| **ஏனைய வருமானம்** | | | |
| அபிவிருத்தி லொத்தர் இலாப பங்குகள் | 1,518.9 | 1,381.8 | -3% |
| SLIIT வருடாந்த வாடகை | 25.0 | 25.0 | 0% |
| ஏனைய வருமானம் | 2.2 | 0.4 | |
| **மொத்த ஏனைய வருமானம்** | **1,546.1** | **1,407.2** | **-3%** |
| **மொத்த வருமானம்** | **4,006.7** | **3,176.2** | **-5%** |
| **செலவுகள்** | | | |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு | (1,600.4) | (1,366.5) | -24% |
| சம்பளம் மற்றும் ஊதியம் | (16.7) | (16.9) | -1% |
| **தேய்மானம்** | **(30.7)** | **(31.0)** | **2%** |
| ஏனைய நிர்வாகச் செலவுகள் | (15.9) | (15.3) | 7% |
| **மொத்த செலவுகள்** | **(1,663.7)** | **(1,429.7)** | **-23%** |
| **மொத்த நிகர மிகை** | **2,343.0** | **1,746.1** | **19%** |

## நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை மற்றும் முதலீட்டு முகாமைக் குழுக் கூட்டங்கள் - 2023

### நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக் கூட்டம் - 2023

நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக் கூட்டங்களில், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையானது, அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மற்றும் தொடர்புடைய தரநிலைகளின்படி நிறுவன செயல்பாடுகள் மற்றும் பெறுபேறுகளை உன்னிப்பாக அவதானித்து மேற்பார்வையிடுகிறது. நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை நிலையான நிகழ்ச்சி நிரல் ஒன்றின்மீதும் கூட்டங்களில் விவாதிக்கப்படும் பிற விடயங்களிலும் கவனம் செலுத்துகிறது. நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக் கூட்டத்தின் சகல பிரமாணக் குறிப்புகளும் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன. நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடுவதுடன், நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் விசேட கூட்டங்கள் தேவைப்படும்போது மற்றும் கோரப்படும்போது கூட்டப்படுகின்றன. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டில் நடைபெற்ற நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் பங்களிப்புத் தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | பராமரிப்பாளர்/கள் | பதவிநிலை | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023.02.07 | 2023.05.15 | 2023.05.09 | 2023.11.24 |
| | | | **97** | **98** | **99** | **100** |
| 1 | திரு. பி.ஏ. பிரேமதிலக | ஓய்வு பெற்ற கணக்காய்வாளர் நாயகம் (தலைவர்) | | √ | - | - |
| 2 | கௌரவ அமைச்சர் நளின் பெர்னாண்டோ | வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் | √ | √ | √ | √ |
| 3 | திரு. ஏ.எம்.பீ.எம்.பி. அத்தபத்து | செயலாளர், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு | √ | √ | √ | √ |
| 4 | திரு.எஸ்.வி.டி. கேசரலால் குணசேகர | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் | √ | √ | * | * |
| 5 | திரு.எம்.என். ரணசிங்ஹ | செயலாளர், உயர் கல்வி அமைச்சு | √ | √ | √ | √ |
| 6 | கலாநிதி. யசந்த மதுரப்பெரும | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் | √ | √ | √ | * |
| 7 | திரு. சம்பத் அமரசிங்க | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் | | | √ | √ |

√ **-பங்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை**

- -நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிலிருந்து விலகியமை

* - பங்குபற்றவில்லை

## கூட்டிணைந்த ஆட்சி

**முதலீட்டுக் குழுக் கூட்டம்**

2023 ஆம் ஆண்டில் நம்பிக்கை நிதியத்தால் நியமிக்கப்பட்ட முதலீட்டுக் குழு நடத்திய கூட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு..

| | பெயர் | பதவிநிலை | உத்தியோகபூர்வ பதவி | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | | | 1 (2023/04/27) |
| | | | | 12 ஆவது |
| 1 | திரு. ஏ.எம்.பீ.எம்.பி. அத்தபத்து | தலைவர் | செயலாளர், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு | √ |
| 2 | திரு.எஸ்.வி.டி. கேசரலால் குணசேகர | உறுப்பினர் | நியமிக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் | √ |
| 3 | திரு. மஞ்சுள டி சில்வா | உறுப்பினர் | பிரதான நிதி அலுவலர், இலங்கை வர்த்தக சம்மேளனம் | √ |
| 4 | திருமதி. அரவிந்தி டி சில்வா | உறுப்பினர் | பிரதான நிதி அலுவலர், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு | √ |
| 5 | திரு. எம்.பி. பண்டார | உறுப்பினர் | பணிப்பாளர்/ மஹபொல நிதியம் | √ |
| 6 | திரு. ரி. தர்மராஜா | உறுப்பினர் | பட்டயக் கணக்காளர் | √ |

**பணியாளர் - 2023 டிசம்பர் வரையான பணியாளர் விபரம் வருமாறு.**

| சேவை வகை | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாளர் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை | 4 | - | 4 |
| மூன்றாம் நிலை | **2** | 2 | - |
| இரண்டாம் நிலை | **12** | 9 | **3** |
| ஆரம்ப நிலை | 4 | 2 | **2** |
| மொத்தம் | **22** | **13** | **9** |

மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் அதன் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட செலவை செலவிடுவதுடன், ஆரம்பத்தில் இருந்தே அது வரையறுக்கப்பட்ட பணியாளர்களுடன் செயற்பட்டு வருகிறது. பணியாளர் தொடர்பான நிர்வாகச் செலவுகள், வருமானத்தின் **0.62%** ஆகவும், செலவினத்தின் **1.9%** ஆகவும் பராமரிக்கப்படலாம்.

பணியாளர் வெற்றிடங்களை உள்ளக பதவி உயர்வுகளாலும் எதிர்காலத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் வெளியக விண்ணப்பதாரர்களாலும் நிரப்புவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தீர்மானித்துள்ளது.

மீளாய்வு வருடத்தில், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, மஹாபொல நம்பிக்கை நிதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் பரிந்துரையுடன், ஒவ்வொரு பணியாளர் பிரிவிற்கும் தேவையான பணியாளர் பதவிகள் மற்றும் தகுதி போன்றவற்றை தீர்மானிப்பதற்கான ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் பதவியணிக் கோரிக்கையை நிறுவன கட்டமைப்புடன் மீளாய்வு செய்யும் பொருட்டு குழுவொன்றை நியமித்தது.

இந்த பதவியணி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டதுடன், ஆட்சேர்ப்புத் திட்டம் (**SOR**) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டது.

## மஹபொல நம்பிக்கை நிதியத்தில் ஏனைய முதலீடுகள்

**அபிவிருத்தி லொத்தர் சபை**

மஹபொல நம்பிக்கை நிதியம், அபிவிருத்தி லொத்தர் சபையில் ரூ. 2.2 மில்லியன் முதலீடு செய்துள்ளதுடன், மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதிகளில் ஒருவர், அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர் சபைக்கு பதவிவழி அதிகாரியாக நியமிக்கப்படுவார்.

அபிவிருத்தி லொத்தர் சபை, அதன் நிதியை நேரடியாக ஜனாதிபதி நிதியத்திற்கு மாற்றுவதுடன், அதனைத் தொடர்ந்து, அவை மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்படும்.

**2019 – 2023 காலப்பகுதியில் அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபம் (DLB) மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையால் பிரிக்கப்பட்டவை ஜனாதிபதி நிதியத்தின் மூலம் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்பட்டன**.

| விபரம் | 2019 ரூ.மில். | 2020 ரூ.மில். | 2021 ரூ.மில். | 2022 ரூ.மில். | 2023 ரூ.மில்.. |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்தி லொத்தர் சபையின் நிகர லாபம் | 2,187.60 | 2,668.80 | 2,770.00 | 3,210.00 | 3,622.51 |
| மஹபொல நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றப்பட்ட பங்கு | 780.60 | 922.30 | 1,153.30 | 1,387.77 | 1,365.83 |

## மஹபொல நம்பிக்கை நிதியத்தில் ஏனைய முதலீடுகள்

**நஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிட்டட். (NWCL)**

மஹபொல நம்பிக்கை நிதியம் அதன் முழு உரிமை நிறுவனமான நஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிடெட் (NWCL) நிறுவனத்தில் 200 மில்லியன் ரூபாவை முதலீடு செய்துள்ளதுடன், 2023 மார்ச் 23 ஆம் திகதி அதை ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக கூட்டிணைத்துள்ளது. நஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிடெட் முகாமை முதலீடாகச் செயல்பட்டதுடன், மஹபொல நம்பிக்கை நிதியத்தின் முதலீடு, குறைந்த அபாயத்துடன் அதிகபட்ச நன்மைகளைப் பெறும் நோக்கத்துடன் நிர்வகிக்கப்பட்டது. நற் வெல்த் கோர்ப்பரேஷனால் முகாமையிடப்படும் அத்தகைய மஹபொல நிதியம், 2019 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் பிரிவில் செயற்படுத்தப்பட்டு வந்த மஹபொல பிரதான கணக்கிற்கு மாற்றப்பட்டது. மேலும், நற் வெல்த் கோர்ப்பரேஷனுடனான நிதி முகாமை உடன்படிக்கை 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் ரத்து செய்யப்பட்டது. நிறுவனம் 2023 இல் செயலற்ற நிலையில் இருந்தது. 2023 ஆம் ஆண்டிற்கான நிதியியற் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

**நற் வெல்த் செக்குரிட்டீஸ் கம்பனி லிமிட்டட் (NWSL)**

நற் வெல்த் செக்குரிட்டீஸ் கம்பனி லிமிட்டட், நஷனல் வெல்த் கோர்ப்பரேஷனின் துணை நிறுவனமாக நிறுவப்பட்டு, 2020.10.26 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின்படி, நஷனல் வெல்த் கோர்ப்பரேஷன் லிமிடெட் மற்றும் நற் வெல்த் செக்குரிட்டீஸ் கம்பனி லிமிட்டட் ஆகிய நிறுவனங்களை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2021 மார்ச் மாதமளவில் அனைத்து பணியாளர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டதுடன், இழப்பீடு மற்றும் பணிக்கொடை என்பன வழங்கப்பட்டுள்ளன. (2022 வருடாந்த அறிக்கையின்படி)

இந்த நிறுவனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கூற்றுகள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.

## மஹபொல நம்பிக்கை நிதியத்தில் ஏனைய முதலீடுகள்

### இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (SLIIT) முதலீடுகள்

2015 மே 12 ஆம் திகதி எட்டப்பட்ட உடன்படிக்கைகள் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் அங்கீகாரமின்றி கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் விசேட விசாரணை ஒன்று நடத்தப்பட்டதோடு, கணக்காய்வாளர் நாயகத்தின் விசேட அறிக்கைக்கு அமைவாக, மஹபொல நிதியத்தின் சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி மாற்றப்பட்டதன் காரணமாக, மஹபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் கீழ் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிர்வாகத்தை தாபிப்பதற்கு அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) இனால் முன்மொழியப்பட்டுள்ளது. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம், ரூ.20 பில்லியனுக்கும் அதிகமான நிகர சொத்துக்களைக் கொண்டுள்ளதுடன், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் சொத்து குறித்த மதிப்பீட்டு அறிக்கையொன்றை அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு மஹபொல மகாபொல நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தீர்மானித்த போதிலும், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தற்போதைய நிர்வாக அதிகாரி மதிப்பீட்டிற்கான வசதிகளை வழங்காதமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, மஹபொல நம்பிக்கை நிதியம் இந்த சொத்துக்களின் அடிப்படையில் அதன் வருமானத்தை இழந்துள்ளது.

---

2021 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் குழுவின் விஞ்ஞாபனத்தின்படி, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவன**த்து**டன் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் தவறானவை என்பதும் முறையாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டதோடு இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவன**த்தின்** நிர்வாக அமைப்பு 2015.05.12 ஆம் திகதிக்கு முன்பு இருந்தபடியே பராமரிக்கப்படல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, மஹபொல நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தேவையான அளவீடுகளை எடுத்துவருகிறது. 2020 ஆம் ஆண்டில், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவன**ம்** மஹபொல நிதிக்கு லாபம் செலுத்தக்கூடிய அளவுக்கு அதிகமாக ரூ.500 மில்லியன் ஐ ஈட்டியது. இது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மாணவர்களின் கல்வி வாய்ப்புகளை இழக்கச் செய்வதுடன் இது குறித்து அனைவரின் கவனமும் செலுத்தப்படும் என்று நம்பப்படுகிறது..

# நிதி அறிக்கைகள்

## 31 டிசம்பர் 2023

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**
**இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானம் பற்றிய கூற்று** ***(இலங்கை ரூபாவில்)***

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான | குறிப்புகள் | 2023 | 2022 |
|---|---|---|---|
| வருமானம் | 7 | 4,005,262,849 | 3,178,564,254 |
| நேரடிச் செலவு (புலமைப்பரிசில் கோடுப்பனவு) | 8 | (1,600,405,994) | (1,366,549,835) |
| | | **2,404,856,855** | **1,812,014,419** |
| ஏனைய வருமானம் | 9 | 2,221,485 | 472,798 |
| **மொத்த வருமானம்** | | **2,407,078,340** | **1,812,487,217** |
| நிர்வாகச் செலவுகள் | 10 | (63,956,962) | (65,799,943) |
| நிதிச் செலவு | 11 | (85,930) | (71,020) |
| **மொத்த செலவுகள்** | | **(64,042,892)** | **(65,870,963)** |
| **மிகை/ (குறை) வரிக்கு முந்திய** | | **2,343,035,448** | **1,746,616,255** |
| வருமான வரிச் செலவுகள் | | - | - |
| **நிகர மிகைகள்/ (குறைகள்)** | | **2,343,035,448** | **1,746,616,255** |
| **ஏனைய விரிவான வருமானம்/ செலவு)** | | | |
| FVTOCI இல் கடன் கருவிகள் மீது நிகர பெறுகை/ (இழப்பு) | | 1,409,471,726 | (1,618,296,642) |
| **வருடத்திற்கான விரிவான வருமானத்தின் பின்னரான நிகர மிகை** | | **3,752,507,174** | **128,319,613** |

**அடைப்பிற்குள் குறிப்பிடப்பட்ட பெறுமானங்கள் கழிப்பனவுகளாகும்.**
**கணக்கீட்டுக் கொள்கைகளும் 26 படிவத்தினூடான 05 பக்கங்கள் மீதான குறிப்புகளும் நிதிக் கூற்றுகளின் முக்கிய பகுதியாகும்.**

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**
**நிதி நிலைமைக் கூற்று** *(இலங்கை ரூபாவில்*

| டிசம்பர 31 இல் உள்ளவாறு | குறிப்புகள் | 2023 | 2022 (மீள வகுக்கப்பட்ட) |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துகள்** | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணம் | 12 | 2,231,510 | 6,082,052 |
| தொட்டுணராச் சொத்துகள் | 13 | 175,159 | 422,220 |
| முதலீட்டுச் சொத்து | 14 | 1,130,911,119 | 1,157,524,137 |
| துணை மூலதனம் | 15 | 985,000,000 | 985,000,000 |
| ஏனைய முதலீடு | 16 | 2,200,000 | 2,200,000 |
| நிதியியல் சொத்துகள் | 17 | 16,831,072,295 | 12,420,137,778 |
| **மொத்த நடைமுறையல்லா சொத்துகள்** | | **18,951,590,082** | **14,571,366,187** |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| ஏனைய சொத்துகள் | 18 | 7,616,064 | 2,465,271 |
| முற்பணங்களும் முற்கொடுப்பனவுகளும் | 19 | 2,084,812 | 2,406,567 |
| ஏனைய பெறுகைகள் | 20 | 1,557,583,531 | 1,444,206,429 |
| NWSL இலிருந்தான பெறுகைகள் | | - | 17,473,950 |
| காசும் காசுக்கு ஈடானவையும் | 21 | 40,116,915 | 66,074,097 |
| **மொத்த நடைமுறைச் சொத்துகள்** | | **1,607,401,322** | **1,532,626,314** |
| **மொத்த சொத்துகள்** | | **20,558,991,404** | **16,103,992,501** |
| **பங்கு மற்றும் பொறுப்புகள்** | | | |
| **பங்கு** | | | |
| திரட்டிய நிதியம் | | 10,147,376,951 | 10,147,376,951 |
| FVTOCI நிதிச் சொத்து ஒதுக்கீடு | | (377,621,576) | (1,787,093,302) |
| தடுத்துவைக்கப்பட்ட வருவாய் | | 9,371,806,295 | 7,211,698,897 |
| **மொத்த பங்கு** | | **19,141,561,670** | **15,571,982,547** |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடு | 22 | 5,722,290 | 5,271,808 |
| **மொத்த நடைமுறையல்லா பொறுப்புகள்** | | **5,722,290** | **5,271,808** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| திரட்டிய மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 23 | 730,679,804 | 526,578,821 |
| இயைபுடைய தரப்பினர் காரணமான தொகை - NWSL | 24 | 680,269,469 | - |
| வங்கி மிகைப்பற்று | 25 | 758,170 | 159,325 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **1,411,707,443** | **526,738,146** |
| **மொத்த பங்கு மற்றும் பொறுப்புகள்** | | **20,558,991,403** | **16,103,992,501** |

இந்த நிதிக்கூற்றுகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை பொறுப்பானதாகும். இந்த நிதிக்கூற்றுகள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றின் பங்குகளில் கையொப்பமிடப்பட்டன.

…………………………..
திரு. எம்.பராக்கிரம பண்டார
பணிப்பாளர்
லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி
புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

…………………………..
திருமதி. லக்ஸ்மி தர்சிகா
கணக்காளர் (பதில்)
லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி
புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

……………………………
திரு. ஏ.எம்.பி.எம். அத்தபத்து
செயலாளர்
வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி
புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் பதவிவழி நம்பிக்கைப் பொறுப்பாளர்

…………………………..
கலாநிதி.வை. மதுரப்பெரும
நியமிக்கப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்
லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி
புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

**அடைப்பிற்குள் குறிப்பிடப்பட்ட பெறுமானங்கள் கழிப்பனவுகளாகும்.**
**கணக்கீட்டுக் கொள்கைகளும் 26 படிவத்தினூடான 05 பக்கங்கள் மீதான குறிப்புகளும் நிதிக் கூற்றுகளின் முக்கிய பகுதியாகும்.**

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**
**பங்குகளில் மாற்றங்கள் பற்றிய கூற்று** *(இலங்கை ரூபாவில்*

**டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான**

| | | திரட்டிய நிதியம் | FVTOCI நிதிச் சொத்து ஒதுக்கீடு | தடுத்துவைக்கப்பட்ட வருவாய் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **2022 ஜனவரி 1 இலுள்ளவாறு மீதி** | | **10,147,376,951** | **(168,796,660)** | **5,487,540,598** | **15,466,120,889** |
| வருடத்திற்கான நிகர மிகை/ (குறை) | | - | - | 1,746,616,255 | 1,746,616,255 |
| மொத்த செலவுகள் | | - | (1,618,296,642) | - | (1,618,296,642) |
| முந்திய வருட சீராக்கல்கள் | **(குறிப்பு I)** | - | - | (22,457,956) | (22,457,956) |
| **2022 டிசம்பர் 31 இலுள்ளவாறு மீதி** | | **10,147,376,951** | **(1,787,093,302)** | **7,211,698,897** | **15,571,982,547** |
| அக்காலப்பகுதிக்கான நிகர மிகை/ (குறை) | | - | - | 2,343,035,448 | 2,343,035,448 |
| ஏனைய விரிவான வருமானம் (செலவு) | | - | 1,409,471,726 | - | 1,409,471,726 |
| முந்திய வருட சீராக்கல்கள் | **(குறிப்பு II)** | - | - | (182,928,049.68) | (182,928,050) |
| **2023 யூலை 31 இலுள்ளவாறு மீதி** | | **10,147,376,951** | **(377,621,576)** | **9,371,806,296** | **19,141,561,671** |

**குறிப்பு I**
முந்தைய வருட சீராக்கல் என்பது, முந்தைய வருடங்களுடன் தொடர்புடைய திறைசேரி முறிகளின் முகப்பு மதிப்பின் திருத்தத்தைக் குறிக்கிறது.

**குறிப்பு II**
2022 இன் பங்களிப்பு பல்.மானி.ஆணைக்குழுவின் திருத்தம்

**அடைப்பிற்குள் குறிப்பிடப்பட்ட பெறுமானங்கள் கழிப்பனவுகளாகும்.**
**கணக்கீட்டுக் கொள்கைகளும் 26 படிவத்தினூடான 05 பக்கங்கள் மீதான குறிப்புகளும் நிதிக் கூற்றுகளின் முக்கிய பகுதியாகும்.**

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்**

**பணப்பாய்ச்சற் கூற்று** *(இலங்கை ரூபாவில்*

| **டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான** | **2023** | **2022** (மீளவகுக்கப்பட்ட) |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பணப்பாய்ச்சல்** | | |
| நிகர மிகை/ (குறை) | **2,343,035,448** | **1,746,616,255** |
| **சீராக்கலுக்காக;** | | |
| தேய்மானம் | 30,729,822 | 31,299,967 |
| நிலையான சொத்துகளின் அகற்றல் தொடர்பான இலாபம் | - | - |
| பணிக்கொடை | 450,483 | 366,333 |
| முந்திய வருட சீராக்கல்கள் | (182,928,050) | (22,457,956) |
| **பணி மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு மிகை** | **2,191,287,703** | **1,755,824,599** |
| **பணி மூலதன மாற்றங்கள்** | | |
| ஏனைய பெறுகைகளில் அதிகரிப்பு/ குறைப்பு | (100,732,190) | (1,077,115,933) |
| ஏனைய கொடுப்பனவுகளில் அதிகரிப்பு/ குறைப்பு | 884,370,452 | 460,777,314 |
| செயற்பாடுகளிலிருந்தான பணம் | **783,638,261** | **(616,338,619)** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர பணப்பாய்ச்சல்/ வெளிப்பாய்** | **2,974,925,964** | **1,139,485,980** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான பணப்பாய்ச்சல்** | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் கையகப்படுத்தல் | (19,201) | (81,500) |
| தொட்டுணராச் சொத்துகளின் கையகப்படுத்தல் | - | - |
| நிலையான சொத்து அகற்றலில் இருந்தான விற்பனைச் செயன்முறை | - | 51,000.00 |
| நிதியியற் சொத்துகளில் முதலீடு/ (மீளப்பெறல்) | 3,001,462,791 | (1,075,467,035) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர பணப்பாய்ச்சல்/ (வெளிப்பாய்ச்ச** | **3,001,443,590** | **(1,075,497,535)** |
| **நிதியியற் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | - |
| **நிதியியற் செயற்பாடுகளிலிருந்தான நிகர பணப்பாய்ச்சல்/ (வெளிப்பாய்ச்ச** | - | - |
| **பணமும் பணத்திற்கு ஈடானவையும் இல் நிகர அதிகரிப்பு/ (குறைவு)** | **5,976,369,554** | **63,988,445** |
| ஜனவரி 1 இலுள்ளவாறு பணமும் பணத்திற்கு ஈடானவையும் | 65,914,772 | 1,926,327 |
| டிசம்பர் 31 இலுள்ளவாறு பணமும் பணத்திற்கு ஈடானவையும் | **6,042,284,326** | **65,914,771** |

வருடத்திற்கான விரிவான வருமானத்தின் பின்னரான நிகர மிகை

**அடைப்பிற்குள் குறிப்பிடப்பட்ட பெறுமானங்கள் கழிப்பனவுகளாகும்.**

**கணக்கீட்டுக் கொள்கைகளும் 26 படிவத்தினூடான 05 பக்கங்கள் மீதான குறிப்புகளும் நிதிக் கூற்றுகளின் முக்கிய பகுதியாகும்.**

## 1. நிறுவனம் சார்ந்த தகவல்கள்

### 1.1 பொதுவான விடயங்கள்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் (நம்பிக்கை நிதியம்) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நம்பிக்கை நிதியமொன்றாக இருப்பதுடன் இந்த நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவகம் கொழும்பு 07, தர்மபால மாவத்தையில் இலக்கம் 191 இல் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜயவர்தன நிலையத்தின் 4 ஆம் மாடியில் அமைத்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

சிறப்புரிமைகளைக் கொண்டிராத இளைஞர் யுவதிகளுக்கு உயர்கல்வியை பெற்றுக்கொள்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் உயர்கல்விக்கான வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சம வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

### 1.2 மஹபொல நம்பிக்கை நிதியம்

**நிதியத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் பின்வருமாறு அமைதல் வேண்டும்.**

- இளைஞர் யுவதிகளுக்கு உயர் கல்விக்கான வசதிகளை வழங்குதல்.
- இரண்டாம் நிலைக் கல்வியை திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்துள்ள தகுதியுடைய இளைஞர் யுவதிகளுக்கு பல்கலைக்கழகமொன்றில் அல்லது தொழில்நுட்ப அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் கல்விசார், தொழில்சார் அல்லது தொழில்நுட்பக் கல்வியை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அவர்களுக்கு உதவி வழங்குதல்.
- இளைஞர் யுவதிகளுக்கு தமது தொழில்சார் திறன்களையும் ஆற்றல்களையும் விருத்தி செய்துகொள்ளக்கூடிய வகையில் தொழிற் பயிற்சி நிறுவனங்களை அமைப்பதற்கும் அவற்றின் முகாமைத்துவத்திற்கும் உதவியளித்தல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் நிறுவனங்கள், மன்றங்கள் மற்றும் ஒத்த நிறுவனங்களை அமைத்தல், நடத்துதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு உதவி புரிதல்.
- கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் உதவி வழங்குதல்.

### 1.3 வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட திகதி

ஏப்ரல் 05, 2024 ஆம் திகதி பொறுப்பாளர் சபையின் தீர்மான நிறைவேற்றுதலின் பிரகாரம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மஹபொல நம்பிக்கை நிதியத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது.

## 2. தயாரிப்பிற்கான அடிப்படை

### 2.1 இணக்கக் கூற்று

2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, விவரமான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளைக் கொண்டமைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல்

நியமங்கள் (SLFRS) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் (LKAS) கொண்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீட்டு அடிப்படை**

வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலே தவிர அட்டுறு அடிப்படை மற்றும் வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் பிரயோக மற்றும் சமர்ப்பிக்கும் நாணயமாகிய இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**2.3 பொருண்மைத் தன்மை மற்றும திரட்சி**

நிதிக்கூற்றுக்களை முன்வைக்கும் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 (LKAS 01) இற்கமைய இணையான உருப்படிகளின் ஒவ்வொரு அளவு ரீதியிலான வகை நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளது. வேறுபட்ட தன்மை அல்லது செயற்பாட்டு உருப்படிகள் அவை அளவு ரீதியில் இல்லையெனில் தவிர தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இனங்காணப்பட்ட பெறுமதியை எதிரீடு செய்வதனை வலுப்பெறச் செய்ய முடியுமான சட்டரீதியான உரிமையொன்று நிலவுமாயின் மாத்திரம் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களை எதிரீடு செய்து நிதி நிலைமைக் கூற்றில் தேறிய பெறுமதி அறிக்கையிடப்படுவதுடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதற்கு இணையாக பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கான விருப்பம் இருப்பின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். நிதிசார் கொள்கைகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு கணக்கீட்டு நியமமும் பொருள்கூறல் ஊடாக விதிக்கப்பட்டிருப்பின் அல்லது அனுமதி வழங்கப்பட்டிருந்தாலே தவிர வருமானக் கூற்றில் வருமானம் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யப்படமாட்டாது.

**2.4 ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள்**

புதிய இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களைப் பயன்படுத்துவதன் பெறுபேறாக மாற்றியமைக்க வேண்டியேற்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தவிர நம்பிக்கை நிதியத்தினால் நிதி கூற்றுக்களை முன்வைக்கும் LKAS 01 இன் பிரகாரம் முன்னைய ஆண்டில் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் இந்த ஆண்டிலும் தொடர்ந்தும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. அத்துடன் தற்போதைய சமர்ப்பித்தலுக்கு அமைந்தொழுகுவதற்காக தேவையான இடங்களில் ஒப்பீட்டு ரீதியிலான தகவல்கள் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு**

நம்பிக்கை நிதியத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பயன்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிடப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வேறுவிதத்தில் குறிப்பிடப்பட்டாலேயொழிய இந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிகளுக்கும் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன.

**3.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

**3.1.1 ஏற்பிசைவிற்கான அடிப்படை**

சேவை வழங்கும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற உருவச் சொத்துக்களை ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலம் பயன்படுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்குள் உட்பாயும் ஆற்றல் நிலவுமாயின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் சொத்துக்களுக்கான செலவுகளை நம்பகத்தன்மையுடன் கணக்கிடவும் முடியும்.

### 3.1.2 அளவீட்டு அடிப்படை

சொத்துக்களாக ஏற்பிசைவு செய்வதற்குப் பொருத்தமான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்று ஆரம்பமாக கிரயத்திற்கமைய அளவிடப்படும். குறிப்பிட்ட ஆதனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவு மற்றும் பின்னர் அதற்காக ஒரு பகுதியை சேர்த்துக்கொள்வதற்கு அல்லது பழைய பகுதிக்குப் பதிலாக புதிய பகுதியொன்றை சேர்த்துக்கொள்வதற்கு செலவாகும் தொகை செலவுக்குள் (கிரயத்திற்குள்) உள்ளடங்கும். சுயமாக உருவாக்கப்பட்ட சொத்துக்களுக்கான மூலப்பொருட்களுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் மற்றும் நேரடி ஊழியம், உருப்படியைக் கொண்டுவரல், அவை வைக்கப்படும் இடத்தில் வைத்தல் மற்றும் மூலதனக் கடன்பெறல் செலவு என்பன நேரடியாக வெளிப்படுத்தப்படும் வேறு எந்த வகையான செலவும் உள்ளடக்கப்படும். கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் குறிப்பிட்ட உபகரணத்தின் செயற்பாட்டிற்காக அத்தியாவசியமாயின் அதனை கணனி உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனப்படுத்தப்படும்.

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழான உருப்படியொன்றின் ஒரு பகுதியில் பயன்தரு ஆயுட்காலம் நிலவும்போது அவை ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் தனித் தனியான உருப்படிகளாக (பிரதான கூறுகள்) கணக்கிடப்படும்.

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக நம்பிக்கை நிதியம் கிரய மாதிரியைப் பயன்படுத்துவதோடு திரண்ட தேய்மானங்கள் மற்றும் ஏதேனும் அட்டுறு சேத இழப்பு நட்டத்தைக் கழித்து கொள்வனவு அல்லது நிர்மாணத்திற்கான ஏதேனும் இடைநேர்விளைவான செலவுகளுடன் அவற்றுக்கான கிரயத்திற்கு அறிக்கையிடப்படும்.

### 3.1.3 பின்னரான (அடுத்தடுத்த) செலவுகள்

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான உருப்படியொன்றின் ஒரு பகுதியினுள் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் உட்பாய்வதற்கான வாய்ப்புக்கள் நிலவுமாயின் மற்றும் செலவுகளை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அவ்வாறான ஒரு பகுதியின் மாற்றீட்டுச் செலவு அந்த உருப்படியின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கு ஏற்பிசைவு செய்யப்படும். சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அன்றாடம் பராமரிப்பதற்கான செலவுகளை செலவிடப்படும் விதத்தில் இலாபம் அல்லது நட்டம் என்ற ரீதியில் கூற்றில் உள்ளடக்கிக் கொள்ளப்படும்.

### 3.1.4 பழுதுபார்ப்பும் பராமரிப்பும்

பழுதுபார்ப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அவை மேற்கொள்ளப்பட்ட நிதிசார் காலத்துடன் தொடர்பான வகையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் குறிப்பிடப்படும். ஒரு சொத்தின் இனங்காணப்பட்ட பகுதியொன்றின் மிகவும் கிட்டிய கால புனரமைப்பினை விஞ்சி எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றபோது பிரதான புனரமைப்பின் கிரயம் சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் உள்ளடக்கப்படும். தொடர்புடைய சொத்துக்களின் மீதி பயன்தரு ஆயுட்காலத்தில் பிரதான புனரமைப்புகள் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

### 3.1.5 ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அகற்றப்படுதல் அல்லது அதன் பயன்பாட்டின் மூலம் எதுவித எதிர்கால அனுகூலங்களும் எதிர்பார்க்கப்படாத சந்தர்ப்பத்தில் அவை ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படும். சொத்துக்களின் ஏற்பிசைவிலிருந்து விலக்குவதனால் ஏற்படும் எந்தவொரு இலாபமும் அல்லது நட்டமும் (தேறிய அகற்றல் இலாபம் மற்றும் சொத்துக்களின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கிடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படும்) குறிப்பிட்ட ஆண்டின் ‘‘ஏனைய தொழிற்பாட்டு வருமானங்களில்’’ ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.1.6 தேய்மானம்

சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார அனுகூலங்களில் எதிர்பார்க்கப்படும் நுகர்வுச் செயல்முறை இந்த முறையியல் மூலம் கிட்டிய வகையில் வெளிப்படுத்தப்படுவதனால் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற உருப்படிகளின் அனைத்துப் பகுதிகளிலும் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலத்திற்கமைய நேர் கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தேய்மானம் ஏற்பிசைவு செய்யப்படும்.

மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 20 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 05 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| கணனிகள் மற்றும் துணைப் பாகங்கள் | 04 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 04 வருடங்கள் |

ஆதனம், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான உருப்படிகளின் ஒவ்வொரு விசேட பகுதிக்குமான தேய்மான விகிதம் அவற்றைப் பயன்படுத்தும் காலத்தின்போது தீர்மானிக்கப்படும். அதாவது, அவை உரிய இடத்தில் இருக்கும்போதும் முகாமைத்துவத்தினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் செயற்பாட்டு நிலைமையில் இருக்கும்போதும் தீர்மானிக்கப்படும். தேய்மான வழிமுறைகள், பயன்தரு ஆயுட்காலம் மற்றும் ஈற்றுப் பெறுமதிகள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மதிப்பீடு செய்யப்பட்டு பொருத்தமாயின் சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.

### 3.1.7 அருவச் சொத்துக்கள்

சொத்துக்கு உடைமையாக்க முடியுமான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிதியத்திற்கு உட்பாய முடியுமாக இருப்பதுடன் சொத்துக்களின் கிரயத்தை நம்பகத் தன்மையுடன் அளவிட முடியுமாயின் அருவச் சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். அருவச் சொத்தொன்று ஆரம்பத்தில் கிரயத்தின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. வணிக சேர்க்கை (கூட்டு) ஊடாக கையகப்படுத்திக்கொள்ளப்பட்ட அருவச் சொத்துக்களின் கிரயமானது கையப்படுத்தப்பட்ட தேதியில் உள்ள நியாயமான பெறுமதியாகும். ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் அருவச் சொத்துக்கள் திரண்ட மதிப்பிறக்கம் மற்றும் திரண்ட சேத இழப்புகளைக் கழித்து கிரயத்தில் காட்டப்படும். உள்ளக அடிப்படையில் உருவாக்கப்பட்ட அருவச் சொத்துக்கள் மூலதன மயப்படுத்தப்படாதிருப்பதுடன் அது சம்பந்தமான செலவுகள், அச்செலவுகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டின் இலாபம் அல்லது நட்டங்களில் காட்டப்படும்.

**வரையறுக்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள்**

வரையறுக்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்கள் பயன்தரு பொருளாதார ரீதியிலான ஆயுட் காலம் பூராக மதிப்பிறக்கம் செய்யப்படுவதோடு அருவச் சொத்துக்கள் சேதமடைந்திருக்க வாய்ப்புள்ளதாக உணர முடியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சேதத்திற்காக மதிப்பீடு செய்யப்படும். வரையறுக்கப்பட்ட பயன்தரு

ஆயுட் காலத்தைக்கொண்ட அருவச் சொத்தொன்றுக்கான மதிப்பிறக்கக் காலம் மற்றும் மதிப்பிறக்க முறை ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க ஆயுட் காலத்தின் அல்லது சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிர்கால பொருளாதார ரீதியிலான அனுகூலங்களின் எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க நுகர்வு முறையின் மாற்றங்கள், பொருத்தமானவாறு மதிப்பிறக்கக் காலப்பகுதி அல்லது முறையியல் மாற்றியமைக்கப்படுவதன் மூலம் விபரிக்கப்படுவதோடு அவை கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படும். வரையறுக்கப்பட்ட ஆயுட் காலத்தைக் கொண்ட அருவச் சொத்துக்களில் மதிப்பிறக்கச் செலவினம் வருமானக் கூற்றில் அருவச் சொத்துக்களின் செயற்பாட்டுடன் இயைந்துள்ள செலவு வகையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அருவச் சொத்துக்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் பின்வருமாறு:

| **உருப்படி** | **ஆயுட் காலம்** |
|---|---|
| கணனி மென்பொருள் | 5 வருடங்கள் |
| இணையத்தளம் | 5 வருடங்கள் |

**ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்**

அருவச் சொத்தொன்று அகற்றப்படுவதன் மீது அல்லது அதன் பயன்பாட்டின் மூலம் எதிர்கால அனுகூலங்கள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அதன் முன்னெடுத்துச் செல்லப்படும் பெறுமதி ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படும். அருவச் சொத்தொன்று ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படுவதன் மூலம் எழுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் அகற்றப்படும் தேதியில் தேறிய கையுதிர்வு வருமானம் மற்றும் சொத்துக்கான முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாக கணக்கிடப்படுவதோடு சொத்து ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது இலாப அல்லது நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.2 முதலீட்டுச் சொத்துக்கள்

### 3.2.1 ஏற்பிசைவு மற்றும் அளவீட்டுக்கான அடிப்படை

வாடகை வருமானம் ஈட்டல் அல்லது மூலதனப் பெறுமதி அதிகரித்தல் அல்லது இந்த இரண்டு விடயங்களுக்குமான ஆனாலும் பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின்போது விற்பனை செய்வதற்கல்லாத சொத்துக்கள் முதலீட்டுச் சொத்துக்களாகும். இந்த சொத்துக்கள் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அல்லது வழங்கல்களுக்காக அல்லது நிர்வாக விடயங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

முதலீட்டுச் சொத்துக்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் அதன் கிரயத்திற்கு ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் முதலீட்டுச் சொத்துக்கள் அதன் கிரயத்தின் அடிப்படையில் குறிப்பிடப்படுகின்றன.

### 3.2.2 ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

முதலீட்டுச் சொத்துக்கள் அகற்றப்பட்டுள்ளபோது அல்லது முதலீட்டுச் சொத்துக்கள் நிரந்தரமாக பயன்பாட்டிலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளபோது மற்றும் அவ்வாறு அகற்றுவதன் மூலம் எவ்வித எதிர்கால பொருளாதார அனுகூலமொன்றையும் எதிர்பார்க்காதபோது முதலீட்டுச் சொத்துக்கள் ஏற்பிசைவிலிருந்து விலக்கப்படும். முதலீட்டுச் சொத்தொன்றை அகற்றுதல் அல்லது நீக்குதல் காரணமாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அந்த முதலீட்டுச் சொத்தை அகற்றுதல் அல்லது நீக்குதலை மேற்கொண்ட ஆண்டிலேயே இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.2.3 முதலீட்டுச் சொத்தொன்றுக்கு / முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து பிற்பட்ட மாற்றல்கள்

உரிமையாளரின் ஆட்சியுரிமை முடிவுறல், வேறு தரப்பொன்றுக்கு தொழிற்பாட்டு குத்தகையொன்றை ஆரம்பித்தல் அல்லது கட்டுமானப் பணி அல்லது அபிவிருத்தி நிறைவு பெறல் மூலம் சான்றளிக்கப்படும் பயன்பாட்டில் மாற்றமொன்று ஏற்படும்போது மாத்திரம் முதலீட்டுச் சொத்தொன்றுக்கு மாற்றல்கள் மேற்கொள்ளப்படும்.

உரிமையாளரின் ஆட்சியுரிமை முடிவுறல் அல்லது விற்பனை செய்யும் நோக்கத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் என்பவற்றின் மூலம் சான்றளிக்கப்பட்ட பயன்பாட்டில் மாற்றமொன்று ஏற்படும்போது மாத்திரம் முதலீட்டுச் சொத்தொன்றிற்கு மாற்றல்கள் மேற்கொள்ளப்படும்.

முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்து உரிமையாளர் குடியுள்ள சொத்தொன்றுக்கு மாற்றலுக்காக, பிற்கால கணக்கீட்டுக்கான அச் சொத்தின் கருதப்படு கிரயமானது பயன்பாட்டில் மாற்றம் ஏற்பட்ட தினத்தில் அதன் நியாயமான பெறுமதியாகும். உரிமையாளர் வசிக்கும் சொத்தொன்றைப் போன்று சொத்தை கம்பெனி பயன்படுத்தினால் அது முதலீட்டுச் சொத்தொன்றாக இருப்பதுடன் அதன் பயன்பாட்டில் மாற்றம் ஏற்படும் தினம் வரையும் ஆதனம், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைக்கமைய அந்தச் சொத்துக்கு கம்பெனி பொறுப்புக்கூற வேண்டும்.

பங்கொன்றை முதலீட்டுச் சொத்தொன்றாக மாற்றும்போது சொத்தின் நியாயமான பெறுமதிக்கமைய குறிப்பிட்ட தினத்தில் அதன் முழுமையான முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் நிலவும் வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். கம்பெனியினால் நிர்மாணிக்கப்பட்ட முதலீட்டுச் சொத்தொன்றில் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகள் கம்பெனியினால் நிறைவு செய்யப்படும்போது சொத்தின் நியாயமான பெறுமதிக்கமைய குறிப்பிட்ட தினத்தில் மற்றும் அதன் முன்னைய முன்கொண்டு செல்லப்படும் பெறுமதியில் நிலவும் வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.2.4 நிதியல்லா சொத்துக்களின் சேத இழப்பு'

சொத்துக்களுக்கான சேத இழப்பு பற்றிய அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை துல்லியமாக அறிந்துகொள்வதற்காக கம்பெனியினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஏதேனும் அறிகுறி இருப்பின் அல்லது சொத்தொன்றுக்காக வருடாந்த சேத இழப்பு பற்றிய சோதனை தேவைப்படுமாயின் நிதியத்தினால் சொத்தின் மீளப் பெறத்தக்க தொகை மதிப்பீடு செய்யப்படும். சொத்தின் மீளப் பெறத்தக்க தொகை எனப்படுவது சொத்தொன்றின் காசுப் பிறப்பாக்க அலகொன்றின் விற்பனைச் செலவு கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதி மற்றும் அதன் பயன்பாட்டுப் பெறுமதி ஆகிய இரண்டில் அதிகமான பெறுமதி சொத்தொன்றின் மீளப் பெறத்தக்க தொகையாகும். சொத்தொன்று காசுப் பாய்வுகளைப் பிறப்பிக்காத சந்தர்ப்பங்களில் இது தனிச் சொத்தொன்றாக தீர்மானிக்கப்படுவதுடன் ஏனைய சொத்துக்களிலிருந்தோ அல்லது சொத்துக்களின் குழுமங்களிலிருந்தோ அநேகமாக சுயாதீனமானதாக இருக்கும். சொத்தொன்றின் அல்லது காசு பிறப்பாக்கி அலகொன்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி அதன் மீளப் பெறத்தக்க பெறுமதியை விஞ்சும் சந்தர்ப்பமொன்றின்போது சொத்து சேத இழப்புக்கு உட்பட்டிருப்பதாக கருதப்படுவதுடன் அந்த சொத்தை அதன் மீளப் பெறத்தக்க பெறுமதியில் குறித்துக்கொள்ளப்படும். பயன்படுத்தப்படும் பெறுமதியை மதிப்பீடு செய்யும்போது பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்திற்கு விசேடமான ஆபத்துக்களின் நடப்பு சந்தைப் பெறுமதி மதிப்பீட்டை வெளிப்படுத்தும் வரிகளுக்கு முன்னரான கழிவு வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் நிகழ்கால பெறுமதிக்கு கழிவு விதிக்கப்படும். விற்பனைக் கிரயம் கழிக்கப்பட்ட நியாயமான பெறுமதியைத் தீர்மாணிக்கும்போது கிட்டிய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் (பணப் பரிமாற்றங்கள்) இருப்பின் அவை கவனத்திற் கொள்ளப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டுகொள்ள முடியாவிட்டால் பொருத்தமான கணக்கீட்டு மாதிரி பயன்படுத்தப்படும்.

## 3.3 துணைக் கம்பெனிகளில் முதலீடுகள் மற்றும் ஏனைய முதலீடுகள்

துணைக் கம்பெனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மற்றும் ஏனைய முதலீடுகள் ஆரம்ப கட்டத்தில் கம்பெனியின் நிதிக் கூற்றுக்களில் கிரயமாக ஏற்பிசைவு செய்யப்படும். துணைக் கம்பெனிகளை கையகப்படுத்திக்கொள்வதுடன் தொடர்புடைய ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் கிரயமாக அச் சந்தர்ப்பத்திலேயே வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுவதுடன் துணைக் கம்பெனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஆரம்ப கட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்டதன் பின்னர் திரண்ட சேத இழப்புகளைக் கழித்ததன் பின்னர் கிரய அடிப்படையில் குறிப்பிடப்படும்.

## 3.4 வெளிநாட்டு நாணயங்கள்

### அ) செயல்படு மற்றும் சமர்ப்பிக்கும் நாணயம்

இந்த நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உருப்படிகள் இந் நிறுவனம் செயற்படும் முதனிலை பொருளாதார சூழலில் பிரயோக நாணய அலகினால் (செயல்படு பண அலகு) அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அது கம்பெனியின் செயல்படு மற்றும் சமர்ப்பிக்கும் நாணய அலகாகும்.

### ஆ) கொடுக்கல் வாங்கல்கள் (பரிமாற்றல்கள்) மற்றும் நிலுவைகள்

வெளிநாட்டு நாணய அலகுகளினால் மேற்கொள்ளப்படும் பரிமாற்றல்கள், குறிப்பிட்ட பரிமாற்றல்கள் மேற்கொள்ளப்படும் தினங்களில் வலுவில் இருக்கும் செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி பிரயோக நாணய அலகிற்கு மாற்றப்படும். அவ்வாறான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கும்போது மற்றும் வெளிநாட்டு பிரயோக நாணய அலகுகளினால் மேற்கொள்ளப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கொடுக்கல் வாங்கல்களின்போது பெறுபேறான அந்நியச் செலாவணி இலாபம் மற்றும் நட்டம் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு நிலுவைகள் ஆண்டிறுதி செலாவணி வீகிதத்திற்கமைய மாற்றப்படும்.

## 3.5. வரி விதிப்பு

### 3.5.1 நடப்பு வரி விதிப்பு

நடப்பு மற்றும் முன் காலப் பகுதிகளுக்காக நடப்பு வருமான வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வருமான வரி ஆணையாளரிடமிருந்து பெறப்பட வேண்டிய அல்லது அந்தத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிதி அளவின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றது. இந்த அளவுகளைக் கணக்கிடுவதற்காக அறிக்கையிடப்படும் தினத்திற்கு முன்னரிலிருந்து அமுல்படுத்தப்பட்ட அல்லது அன்றைய தினத்தில் அமுல்படுத்தப்படும் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நம்பிக்கை நிதியத்திற்கான வருமான வரி நிதி ஏற்பாட்டுக்குரிய அடிப்படை கீழுள்ளவாறாகும்.

### அ) மஹபொல நம்பிக்கை நிதியம்

மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் வருமான வரிக்கு உட்படுவதோடு இறுதி வரியானது காலப் பகுதிக்கான தேறிய வருமானம் மற்றும் அனுமதியளிக்கப்பட்ட

செலவாக கருதப்படும் அனைத்துச் செலவுகள் மீது கணக்கிடப்படுவதோடு அதன் பின்னர் வரிக் கணக்கீட்டின் மீது இறுதி வருமானம் நிர்ணயிக்கப்படும்.

**மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் வருமான வரி பற்றிய அமைச்சரவையின் தீர்மானம்.**

**அமைச்சரவை விஞ்ஞாபனம் - கொள்கை ரீதியான விடயங்கள்**

1981 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில் துல்லியமாக காட்டப்பட்டள்ள வகையில் தீர்வை வரி, இறக்குமதி வரி, வருமான வரி, அன்பளிப்பு வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி உட்பட அனைத்து வரிகளிலிருந்தும் விலக்குப் பெறுவதற்காக 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் மூன்றாம் அட்டவணையில் மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தை உள்ளடக்குவதற்காக உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரினால் 2019.12.31 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிருபமொன்றாகிய அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 20/0144/215/010 – நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் அவதானிப்புகளுடன் மேற்படி நிருபம் கவனத்தில் கொள்ளப்பட்டது. கலந்துரையாடல்களின் பின்னர் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் செயலாளருடன் இணைந்து நிருபத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கத்திற்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திற்காக முன்மொழிவொன்றை முன்வைப்பதற்கான இயலுமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிடுவதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

### 3.5.2 பிற்போடப்பட்ட வரி

அறிக்கையிடும் திகதியன்று சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகள் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதிகளிடையே தற்காலிக மாற்றங்களின் அடிப்படையில் கடன்பாட்டு முறையைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

அனைத்து தற்காலிக மாற்றங்களுக்காகவும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படும்.

குறைக்க முடியுமான அனைத்து தற்காலிக மாற்றங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரிக் கடன் மற்றும் வரி நட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவது பயன்படுத்தக்கூடிய வரி அறவிடக்கூடிய இலாபம் கிடைக்கும் இயலுமை உள்ள அளவிற்கு குறைக்க முடியுமான தற்காலிக மாற்றங்கள், பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் வரி நட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 3.6 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கையிருப்பிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள பணம், கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலப் பகுதிக்குள் ஆரம்ப முதிர்ச்சியடையும் தினத்தினைக்கொண்ட உயர் திரவத்தன்மையைக் கொண்ட ஏனைய குறுகிய கால முதலீடுகள் உள்ளடக்கப்படுகின்றன. வங்கி மிகைப்பற்று வசதிகள் ஐந்தொகையில் (இருப்புப் பத்திரத்தில்) நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4 நிதிச் சாதனங்கள் - ஆரம்ப ஏற்பிசைவு மற்றும் பின் தொடர் அளவீடுகள்

### 4.1 நிதிச் சொத்துக்கள்

### 4.1.1 நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடு

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய, நம்பிக்கை நிதியம் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்காக வர்த்தக மாதிரியின் அடிப்படையில் அதன் அனைத்து நிதிசார் சொத்துக்களையும் வகைப்படுத்துவதோடு சொத்துக்கான ஒப்பந்தஞ்சார் விதிகள்,

- தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்திற்கு
- ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதிக்கு (நடுநிலைப் பெறுமதி)
  (FVOCI)
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதிக்கு (FVTPL) அளவீடு செய்யப்படும்.

நிதிசார் சொத்துக்களின் பின்னிட்ட அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியுள்ளன.

### 4.1.2 தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

நிதிசார் சொத்தொன்று கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் பெயர் குறிப்பிடப்படாதிருப்பின் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இற்கமைய அந்த நிதிச் சொத்து தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படும்.

- ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்வுகளை ஒன்றுசேர்ப்பதற்காக சொத்துக்களைத் தடுத்து வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்ட வர்த்தக மாதிரியினுள் சொத்துக்களைத் தடுத்துவைத்திருத்தல்.
- நிதிசார் சொத்தின் ஒப்பந்த நிபந்தனைகளின் மூலம் குறிப்பிட்ட திகதிகளில் தீர்க்கப்படாதுள்ள ஆரம்பத் தொகை மற்றும் அத்தொகையின் மீதான வட்டி செலுத்தல்களான நிதிப் பாய்வுகளை உருவாக்குதல்.

### 4.1.3 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்கள், ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட கடன் மற்றும் உரிமையாண்மைக் கருவிகள் என்பவற்றைக் கொண்டமைந்திருக்கும்.
இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இற்கமைய, ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட கடன் சாதனங்கள் மற்றும் ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு பெயர் குறிப்பிடப்பட்ட உரிமையாண்மைக் கருவிகள் என்பவற்றைக் கொணடு இது அமைந்திருக்கும்.

### 4.1.4 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட கடன் சாதனங்கள்

கடன் சாதனமொன்று கீழ் குறிப்பிடப்படும் இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில்

பெயர் குறிப்பிடப்படாதிருப்பின் மட்டும் ஏனைய விபரமான வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்படும்.

- ஒப்பந்த அடிப்படையிலான காசுப் பாய்வுகளை ஒன்றுசேர்த்தல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் மூலம் தனது நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளும் வர்த்தக மாதிரியினுள் சொத்துக்களைத் தடுத்து வைத்திருத்தல்.
- நிதிசார் சொத்தின் ஒப்பந்த நிபந்தனைகளின் மூலம் குறிப்பிட்ட திகதிகளில் தீர்க்கப்படாதுள்ள ஆரம்பத் தொகை மற்றும் அத்தொகையின் மீதான வட்டி செலுத்தல்களான நிதிப் பாய்வுகளை உருவாக்குதல்.

சீர்மதிப்புப் பெறுமதி கடன் சாதனங்கள், ஏனைய விபரமான வருமானத்தில் இல் ஏற்பிசைவு செய்யப்படும் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றமடைவதனால் எழும் இலாபம் அல்லது நட்டத்துடன் சீர்மதிப்புப் பெறுமதியில் பின்னர் அளவீடு செய்யப்படும். வட்டி வருமானம் மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்கள் மற்றும் மாற்றங்கள் இலாபம் மற்றும் நட்டத்தினுள் ஏற்பிசைவு செய்யப்படும். ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்கனவே ஏற்பிசைவு செய்யப்பட்ட திரட்டிய இலாபம் அல்லது நட்டத்தை ஏனைய விபரமான வருமானத்திலிருந்து இலாபம் மற்றும் நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படும். இதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் கீழ் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்ட அரசாங்கப் பிணையங்களைக் கொண்டு இந்த சாதனங்கள் அமைந்துள்ளன.

### 4.1.5 ஏனைய விபரமான வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் பிரகாரமான உரிமையாண்மைக் கருவிகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 32இல் ‘‘நிதிச் சாதனங்களைச் சமர்ப்பித்தல்’’ என்பதன் கீழ் உரிமையாண்மை எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துவதற்காக இயைந்து செல்லும் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வைத்துக்கொள்ளப்படாத உரிமையாண்மை கருவிகளில் மூலோபாய ரீதியிலான அலுவல்களுக்காக வைத்துக்கொள்ளப்பட்ட உரிமையாண்மை முதலீடுகளின் ஒரு பகுதியை ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர், ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய (FVOCI) கடன் சாதனமாக இரத்துச்செய்ய முடியாத வகையில் வகைப்படுத்துவதற்கு சிலவேளை கம்பெனியினால் தீர்மானிக்கப்படும். அவ்வாறான வகைப்படுத்தல் கருவிக்குக் கருவி எனும் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இந்த உரிமையாண்மைக் கருவிகளின் இலாபம் மற்றும் நட்டம் ஒருபோதும் இலாபம் அல்லது நட்டத்தின் கீழ் கொள்ளப்படாதிருப்பதுடன் அதற்குப் பதிலாக ஏற்பிசைவிலிருந்து அகற்றும் சந்தர்ப்பத்தில் தடுத்துவைக்கப்பட்ட ஈட்டல்களுக்கு நேரடியாக மாற்றப்படும். செலுத்துவதற்கான உரிமை தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் பங்கிலாபங்கள் இலாபம் அல்லது நட்டமாக ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் கீழ் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியின் கீழான கடன் சாதனங்கள் சேத இழப்பு தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்பட மாட்டாது.

இதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு நியமம் 39இல் ‘‘விற்பனைக்காக உள்ள’’ இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட விலை குறிப்பிடப்படாத உரிமைப் பங்குகளை இந்தக் கருவிகள் கொண்டிருக்கும்.

### 4.1.6 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 9இற்கமைய, தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அல்லது ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள் தவிர ஏனைய அனைத்து நிதிச் சொத்துக்களும்

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். வர்த்தக நோக்கத்திற்காக தடுத்துவைக்கப்பட்ட அல்லது முகாமைப்படுத்தப்படும் மற்றும் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை ஒன்றுசேர்ப்பதற்கு ஏற்றிராததைப் போன்றே காசுப் பாய்ச்சல்களை ஒன்றுசேர்ப்பதற்கு மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்தல் போன்ற இரண்டு அலுவல்களையும் கொண்டிருக்காமையினால் அதன் செயலாற்றுகை சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிச் சொத்துக்களின் கீழ் இலங்கை கணக்கீட்டு நியமம் 39இற்கமைய, வர்த்தக நோக்கத்திற்காக தடுத்து வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் உள்ளடக்கப்படும்.

## 4.2 நிதிப் பொறுப்புக்கள் (நிதிக் கடன்பாடுகள்)

### 4.2.1 நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் பின் தொடர் அளவீடுகள்

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 இற்கமைய, நிதிப் பொறுப்புக்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.

- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிப் பொறுப்புக்கள், மற்றும்
  - வர்த்தக நோக்கத்திற்காக தடுத்து வைக்கப்பட்டவை அல்லது
  - இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு பெயர் குறிப்பிடப்பட்டவை

  என வகைப்படுத்தப்படும்.
- தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட நிதிப் பொறுப்புக்கள்

நிதிப் பொறுப்புக்களின் பின் தொடர் அளவீடுகள் அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியுள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) ஊடாக நிதிப் பொறுப்புக்களின் வகைப்படுத்தலுக்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) இல் காணப்படுகின்ற தேவைகள் அநேகமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

### 4.2.2 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிப் பொறுப்புக்கள்

வர்த்தக நோக்கத்திற்காக தடுத்துவைக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் பெயர் குறிப்பிடப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய நிதிப் பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்படாத நிதிப் பொறுப்புக்கள் தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்திற்கமைய நிதிப் பொறுப்பாக வகைப்படுத்தப்படும்.

## 4.3 நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களை ஏற்பிசைவிலிருந்து விலக்குதல்

### 4.3.1 நிதிச் சொத்துக்கள்

நிதிச் சொத்தொன்றின் மூலம் காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த ரீதியிலான உரிமை முடிவுறுத்தப்படும்போது அல்லது நிதிச் சொத்தின் உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை பொருண்மையுடையதாக மாற்றும் கொடுக்கல் வாங்கலொன்றின் ஊடாக ஒப்பந்த நிதிப்பாய்வுகளைப் பெறும் உரிமையை அது ஒப்படைக்கும்போது அல்லது உரிமையின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை பொருண்மையுடையதாக ஒப்படைக்கப்படல் அல்லது நிறுத்திவைத்தலை கம்பெனி மேற்கொள்ளாதபோது மற்றும் கம்பெனி நிதிசார் சொத்தொன்றின் கட்டுப்பாட்டை வைத்துக்கொள்ளாதபோது கம்பெனி நிதி சொத்தொன்றினை (அல்லது ஏற்புடையதாக அமையும் சந்தர்ப்பங்களில் நிதி ரீதியான சொத்தொன்றின் பகுதியினை) ஏற்பிசைவிலிருந்து விலக்கும்.

சொத்தின் முன்கொண்டு செல்லும் பெறுமதி (அல்லது சொத்தின் ஏற்பிசைவிலிருந்து விலக்கும் பகுதியுடன் தொடர்புடைய முன்கொண்டு செல்லும் பெறுமதி) மற்றும் பெறப்பட்டுள்ள கைம்மாறுகளின் மொத்தம் (புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட புதிய சொத்துக்களிலிருந்து புதிதாக பொறுப்பேற்கப்படும் பொறுப்புக்களை கழித்ததன் பின்னர் அது உட்பட) என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு மற்றும் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யபடும் திரட்டிய இலாபம்/நட்டம், நிதிச் சொத்தொன்றை ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஆயினும், ஏனைய விபரமான வருமானங்களின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கமைய பெயர் குறிப்பிடப்படும் உரிமையாண்மை முதலீட்டுப் பிணையங்களுடன் ஏற்புடையதாக ஏற்பிசைவு செய்யப்படும் திரட்டிய இலாபம்/நட்டம், இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9 (SLFRS 9) இற்கமைய ஏற்பிசைவிலிருந்து விலக்கும்போது இலாபம் அல்லது நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்பட மாட்டாது.

கம்பனியினால் உருவாக்கப்படும் அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள, ஏற்பிசைவிலிருந்து விலக்குவதற்காக தகைமை பெறும் ஒப்படைக்கப்பட்ட நிதிச் சொத்துக்களுடன் தொடர்புடைய எவ்வகையிலான உரிமையும் இருப்பின் அது வேறான சொத்து அல்லது பொறுப்பாக ஏற்பிசைவு செய்யபடும்.

நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யபடும் சொத்துக்களை மாற்றுவதற்காக கம்பெனி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டாலும் மாற்றப்படும் சொத்துக்களில் அல்லது அதன் ஒரு பகுதியில் அனைத்து அல்லது குறிப்பிடத்தக்களவு அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை தடுத்துவைத்தல் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது மாற்றப்படும் சொத்துக்களின் ஏற்பிசைவு விலக்கப்படடாட்டாது.

சொத்துக்கள் மூன்றாம் தரப்பொன்றுக்கு மாற்றப்படும் சொத்துக்களின் சம கால மொத்த ஈட்டல்கள் பரிமாறப்படும் பிரகாரம் விற்பனையை மேற்கொள்ளும்போது அது விற்பனை மற்றும் மீள் கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலொன்றுடன் சமமான வகையில் பாதுகாக்கப்பட்ட நிதிசார் கொடுக்கல்வாங்கலொன்றாக கணக்கு வைக்கப்படும். அதற்கான காரணம், கம்பெனியால் அந்த சொத்துக்களின் உரிமையின் அனைத்து அல்லது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை தக்க வைத்துக்கொள்வதாகும்.

கம்பனியினால் சொத்தொன்றின் ஊடாக காசுப் பாய்ச்சலொன்றைப் பெற்றக்கொள்வதற்கான தனது உரிமையை ஒப்படைக்கும்போது அல்லது ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் சொத்தொன்றின் குறிப்பிடத்தக்களவு அனைத்து ஆபத்துக்கள் மற்றும் அனுகூலங்களை ஒப்படைத்தல் அல்லது தக்கவைத்துக்கொள்ளல் மேற்கொள்ளப்படாமை அல்லது சொத்தை நிர்வகிக்கும் அலுவல் ஒப்படைக்கப்பட்டிராதபோது சொத்து சம்பந்தமாக கம்பெனியின் தொடர்ந்தேர்ச்சியான தொடர்பு காணப்படும் வரை அந்த சொத்து ஏற்பிசைவு செய்யப்படும். அச் சந்தர்ப்பத்தில் கம்பெனியினால் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் ஏற்பிசைவு செய்யப்படும். கம்பெனியினால் தக்கவைத்துக்கொள்ளப்படும் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படும் அடிப்படையில் உரிமை மாற்றம் செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் அளவீடு செய்யப்படும்.

### 4.3.2 நிதிப் பொறுப்புக்கள்

நிதிப் பொறுப்பொன்றின் ஒப்பந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது அல்லது இரத்துச் செய்யும்போது அல்லது குறிப்பிட்ட காலம் முடிவடைந்ததன் பின்னர் கம்பெனி நிதிப் பொறுப்பை ஏற்பிசைவிலிருந்து விலக்கும்.

### 4.3.3 நிதிச் சாதனங்களை எதிரீடு செய்தல்

இனங்காணப்பட்ட நிதிப் பெறுமதிகளை எதிரீடு செய்வதற்கு தற்போது செயல்வலுப்பெறச் செய்ய முடியுமான சட்ட ரீதியிலான உரிமையொன்று இருப்பின் மற்றும் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கு அல்லது கைத்தேறியதாக்கிக் கொள்வதற்கு மற்றும் அதற்கு இணையான வகையில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு விரும்பினால் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களை எதிரீடு செய்து அதன் தேறிய பெறுமதி நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்படும்.

வருமானம் மற்றும் செலவுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் ஊடாக அனுமதி வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அல்லது கம்பெனியின் வர்த்தக நடவடிக்கைகள் போன்ற சமமான விதத்திலான கொடுக்கல்வாங்கல்களின் பெறுபேறாக அமையும் இலாபம் மற்றும் நட்டத்திற்கு மாத்திரம் தேறிய அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றன.

## 5. பொறுப்புக்களும் நிதி ஏற்பாடுகளும்

### 5.1 பொறுப்புக்கள்

### 5.1.1 ஓய்வூதிய அனுகூலங்களுக்கான பொறுப்பு

### 5.1.2 வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள் - ஓய்வுப் பணிக்கொடை

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அனைத்து ஊழியர்களுக்கும் முதலாம் வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வுப் பணிக்கொடைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆயினும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஊழியர் ஒருவருக்கு 05 வருடங்கள் பூர்த்தியடைந்ததன் பின்னரே பொறுப்பு உருவாகின்றது. இந்தப் பொறுப்பு, சேவைக் காலத்திற்குரிய மொத்த வருடங்களுக்கும் மாதச் சம்பளத்தின் அரைவாசி என்ற வீதத்தின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகின்றது. இந்த விடயம் நிதி நிலைமைக் கூற்றில் ஊழியர் அனுகூலங்கள் பொறுப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பணிக்கொடை பொறுப்புக்காக வெளிவாரியாக நிதியீட்டல் மேற்கொள்ளப்படுவதில்லை.

### 5.1.3 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் குறிப்பிட்ட சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய ஏற்புடைய பங்களிப்பு நிதி ஏற்பாடுகளினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஊழியர்களை உள்ளடக்கிய வகையில் பங்களிப்புத் திட்டங்களுக்கு பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

**ஊழியர் சேமலாப நிதியம்**

நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியரால் முறையே ஊழியரின் மாதச் சம்பளத்தின் 15% மற்றும் 10% என்ற ரீதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படுகின்றன.

**ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஊழியரின் மாதச் சம்பளத்தின் 3% பங்களிப்பு மஹபொல நம்பிக்கை நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 5.2 நிதி ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் பெறுபேறாக நிகழ்கால சட்ட ரீதியான பொறுப்பொன்றை நிதியம் கொண்டிருக்கையில் அந்தப் பொறுப்பை தீர்ப்பதற்காக பொருளாதார அனுகூலங்களைக் கொண்ட வளங்கள் வெளியே செல்வதற்கான வாய்ப்பு நிலவுகையில் மற்றும் பொறுப்பின் அளவு சம்பந்தமாக நம்பகமான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியுமாக இருக்கையில் நிதி ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும். கம்பெனியினால் சில அல்லது சகல நிதி ஏற்பாடுகளும் மீளளிப்புச் செய்யப்படுவது எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் உதாரணமாக காப்புறுதி ஒப்பந்மொன்றின் கீழ் எனில் மீளளிப்புச் செய்தல் வேறான சொத்தொன்றின் கீழ் ஏற்பிசைவு செய்யப்பட்டாலும் மீளளிப்புச் செய்தல் உண்மையிலேயே உறுதியாயின் மாத்திரமே அவ்வாறு மேற்கொள்ளப்படும். எந்த விதத்திலும் நிதி ஏற்பாட்டுடன் தொடர்பான செலவுகள், ஏதேனும் மீளளிப்பு இருப்பின் அதனை கழித்து வருமானக் கூற்றில் முன்வைக்கப்படுகின்றன.

பணத்தின் காலப் பெறுமதியின் தாக்கம் பொருண்மையாயின் பொறுப்புக்களுக்கான ஆபத்துக்களை ஏற்புடைய பிரகாரம் சுட்டிக்காட்டும் நடப்பு வரி வீதத்தினைப் பயன்படுத்தி நிதி ஏற்பாடு கழிவு செய்யப்படும். கழிவு பயன்படுத்திக்கொள்ளப்படும்போது செலவிடப்படும் காலத்திற்கமைய ஏற்படும் நிதி ஏற்பாட்டின் அதிகரிப்பு நிதிசார் கிரயமொன்றாக ஏற்பிசைவு செய்யப்படும்.

# 6. வருமானம் மற்றும் செலவுகள்

## 6.1 வருமானத்தை இனங்காணல்

2018 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) ஊடாக, வருமானம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 18 (LKAS 18) மற்றும் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தப் பணி தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 11 (LKAS 11) மற்றும் சர்வதேச நிதி அறிக்கையிடல் ஆய்வுக் குழுவின் நுகர்வோரின் ஆர்வம் சம்பந்தமான IFRIC 13 உம் உட்பட்ட வருமானத்தை இனங்காண்பதற்கான வழிகாட்டல்கள் மீளமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 (SLFRS 15) ஊடாக வருமானத்தை இனங்கண்டு கொள்வதெப்படி மற்றும் எந்தளவு என்ற ரீதியில் எந்தத் திகதிக்கு என்பது பற்றி நிர்ணயித்துக் கொள்வதற்காக முழுமையான மாதிரி சட்டகமொன்று வழங்கப்படும். எந்தத் திகதியில் வருமானம் இனங்கண்டுகொள்ளப்படுகின்றதெனவும் எந்தளவு பெறுமதியில் என்பதனை நிர்ணயித்துக்கொள்வதற்காக நிறுவனம் ஐந்து கட்டங்களைக் கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்திக்கொள்ளல் அவசியமாகும். எந்தத் திகதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது அல்லது நிறுவனத்திற்காக எதிர்பார்க்கப்படும் உரிமையின் கீழ் எந்தப் பெறுமதியில் நுகர்வோருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் நிர்வகிப்பை ஒப்படைத்தல் என்பது மற்றும் எந்தத் தினத்தில் என்பது நம்பிக்கை நிதியத்திற்கு பொருளாதார அனுகூலங்கள் வருவதனை எதிர்பார்க்கலாமென்பது மற்றும் செலுத்தல் மேற்கொள்ளப்படும் திகதி எதுவாயினும் வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அல்லது

ஏற்க வேண்டிய சம்பந்தப்பட்ட செலவுகளை நம்பகமான விதத்தினாலான அளவீடு இந்த மாதிரியின் ஊடாக நிர்ணயிக்கப்படுகின்றது. ஒப்பந்த அடிப்படையிலான வரையறுக்கப்பட்ட செலுத்தல் நிபந்தனைகளையும் கவனத்திற்கொண்டு பெறப்பட்டுள்ள மற்றும் பெற வேண்டிய மறுசீரமைப்புக்களுடன் தொடர்பான சீர்மதிப்புப் பெறுமதியின் அடிப்படையில் வருமானம் அளவீடு செய்யப்படுகின்றது.

### 6.1.1 வட்டி வருமானம்

தேய்மானப்படுத்தப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படும் அனைத்து நிதிச் சாதனங்கள் மற்றும் அவற்றை விற்பனை செய்வதற்காக காணப்படுகின்ற வகைப்படுத்தப்பட்ட வட்டியைக் கொண்டுள்ள நிதிசார் சொத்துக்களின் மீதான வட்டி வருமானம் அல்லது செலவுகள் விளைவு வட்டி வீதத்தின் அடிப்படையிலேயே அறிக்கையிடப்படும். விளைவு வட்டி வீதம் என்பது நிதிச் சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களின் தேறிய முன்கொண்டு செல்லும் பெறுமதிக்கு நிதிசார் கருவிகளில் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் அல்லது குறுகிய காலப் பகுதிக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால பணச் செலுத்தல்கள் அல்லது கிடைப்பனவுகளுக்கமைய உண்மை நிலைமையில் கழிவு செய்யப்பட்ட வீதமாகும். வருமானக் கூற்றில் நிதி வருமானத்திற்குள் வட்டி வருமானம் உள்ளடக்கப்படும்.

### 6.1.2 ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

## 6.2 செலவுகள்

வர்த்தகத்தை பேணிச் செல்வதற்காக செலவு செய்யப்படும் அனைத்து செலவுகளும் ஆண்டிற்கான இலாபத்தைக் கணக்கிடும்போது வருமானத்திலிருந்து அறவிடப்படும். பழுதுபார்ப்புக்கள் மற்றும் புதுப்பித்தல்கள், குறிப்பிட்ட செலவு மேற்கொள்ளப்பட்ட ஆண்டுடன் தொடர்புடைய இலாபம் மற்றும் நட்டங்களில் அறவிடப்படும்.

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைபல் நம்பிக்கை நிதியம்**
**நிதியியற் கூற்றுகளிற்கான குறிப்புகள்** *(இலங்கை ரூபாவில்)*

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான | | 2023 | 2022 |
|---|---|---|---|
| **7 வருமானம்** | | | |
| நிகர வட்டி வருமானம் | **7.1** | 2,461,392,279 | 1,771,795,864 |
| அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்தான இலாபப் பங்கு | | 1,518,870,570 | 1,381,768,390 |
| SLIIT இலிருந்தான குத்தகை வருமானம் | | 25,000,000 | 25,000,000 |
| | | **4,005,262,849** | **3,178,564,254** |

| | | | |
|---|---|---|---|
| **7.1 MTF -முதலீட்டு வருமானம்** | | | |
| திறைசேரி முறிகள் | | 614,345,175 | 726,704,479 |
| திறைசேரி முறிகள் - பங்குத்தொகையின் நிகர மூலதனப் பெறு | | - | - |
| திறைசேரி முறிகள் - வட்டி | **(குறிப்பு 7.2)** | 1,513,713,588 | 628,929,539 |
| கடனீட்டுப் பத்திர வட்டி | | 9,679,694 | 110,793,893 |
| பிடி.வை.வரியின் நிலையான வைப்பு வட்டி | | 258,075,240 | 272,130,181 |
| ரீபோ வருமானம் | | 35,688,360 | 5,439,284 |
| மேலதிகநேர வருமானம் | | 29,316,072 | 27,418,223 |
| துப்பரவாளர் வருமானம் | | 574,150 | 380,263 |
| | | **2,461,392,279** | **1,771,795,862** |

| | | |
|---|---|---|
| **7.2 திறைசேரி உண்டியல் வட்டி வருமானம்** | | |
| வருடத்தில் பெற்ற வருமானம் | 1,537,483,374 | 60,687,700 |
| பெறத்தக்க வட்டி | 118,194,306 | 659,965,785 |
| மொத்த வட்டி வருமானம் | **1,655,677,680** | **720,653,485** |
| **கழி** | | |
| NWSL இன் திறை.உண். வட்டி வருமானம் | (141,964,092) | (91,723,946) |
| MTF இன் திறை.உண். வட்டி வருமானம் | **1,513,713,588** | **628,929,539** |

**அடைப்பிற்குள் குறிப்பிடப்பட்ட பெறுமானங்கள் கழிப்பனவுகளாகும்.**
**நிதிக் கூற்றுகளிற்கான குறிப்புகள் தொடர்கிறது**

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைபல் நம்பிக்கை நிதியம்**
**நிதியியற் கூற்றுகளிற்கான குறிப்புகள்** *(இலங்கை ரூபாவில்*

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான | | 2023 | 2022 |
|---|---|---|---|
| **8 நேரடிச் செலவுகள்** | | | |
| **புலமைப்பரிசில் கொடுப்பனவு** | | | |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு - பல்கலைக்கழகம் | **(குறிப்பு 8.1)** | 1,540,063,200 | 1,288,347,209 |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு - தொழில்நுட்பக் கல்லூரிகள் | | 53,377,100 | 59,930,000 |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு - ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் | | 5,612,742 | 17,866,350 |
| புதிதாக புலமைப்பரிசில் அளிப்புச் செலவு | | 1,32,952 | 406,276 |
| | | **1,599,053,042** | **1,366,549,835** |
| **8.1 புலமைப்பரிசில் கொடுப்பனவு - பல்கலைக்கழகங்கள்** | | | |
| புலமைப்பரிசில் கொடுப்பனவு - பல்கலைக்கழகங்கள் | | 3,016,756,600 | 2,677,047,059 |
| கழி: திறைசேரிப் பங்களிப்பு (பல்.மா.ஆணை. ஊடாக) | | (1,476,693,400) | (1,388,699,850) |
| | | **1,540,063,200** | **1,288,347,209** |
| **9 ஏனைய வருமானம்** | | | |
| அலுவலர் கடன் வட்டி | | 81,011 | 65,065 |
| நன்கொடைகள் | | 1,860,039 | - |
| புலமைப்பரிசில் கழித்தல் | | 39,990 | 98,350 |
| நானாவித வருமானம் | | 4,000 | 38,000 |
| ஏனைய வருமானம் | | - | 143,735 |
| பணிக்கொடை நிலை.வைப்பு வருமானம் | | 236,444 | 127,649 |
| | | **2,221,484** | **472,798** |

